# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2369/42 - 2024 පෙබරවාරි මස 02 වැනි සිකුරාදා - 2024.02.02

*2369/42 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 4 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதிய 2366/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டவாறான 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதிய 2295/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதியை, அதன் II ஆம் அட்டவணையை நீக்கி அதற்குப் பதிலாகப் இதனகத்தேயுள்ள அட்டவணையைப் பிரதியீடு செய்து இத்தால் திருத்தியமைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, பெப்புருவரி 02.


1A - PG 6645 — 404 (2024/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

"II ஆம் அட்டவணை

| | அளவுகோல்கள் | | சீட்டாட்ட உரிமக் கட்டணம் | சீட்டாட்ட உரிமத்தின் புதுப்பித்தல் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | சீட்டாட்டத்தில் (கசினோ) நேரடி முதலீடாக குறைந்த பட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் முப்பது மில்லியனை (ஐ. அ. டொ. 30 மில்.) ஆனால் ஐக்கிய அமெரிக்க டொலர் நூறு மில்லியனினை (ஐ. அ. டொ. 100 மில்.) விடக் குறைவாகக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் ஒருவர், மற்றும் | (அ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி ஒன்றில்* குறைந்த பட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் இருநூற்று ஐம்பது மில்லியனினை (ஐ. அ. டொ. 250 மில்.) முதலீடாகக் கொண்டுள்ளவர் ; அல்லது<br>(ஆ) குறைந்தபட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் இருநூற்று ஐம்பது மில்லியன் (ஐ. அ. டொ. 250 மில்.) முதலீடு செய்யப்பட்டுள்ள அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி ஒன்றில்* செயற்படுபவர் | ரூபா பத்து பில்லியன் | ரூபா பத்து பில்லியன் |
| 2 | சீட்டாட்டத்தில் (கசினோ) நேரடி முதலீடாக குறைந்த பட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் நூறு மில்லியனினை (ஐ. அ. டொ. 100 மில்.) கொண்டுள்ள விண்ணப்பதாரர் ஒருவர், மற்றும் | (அ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி ஒன்றில்* குறைந்த பட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் ஐந்நூறு மில்லியன் (ஐ. அ. டொ. 500 மில்) முதலீடாகக் கொண்டுள்ளவர் ; அல்லது<br>(ஆ) குறைந்தபட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் ஐந்நூறு மில்லியன் (ஐ. அ. டொ. 500 மில்.) முதலீடு செய்யப்பட்டுள்ள அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி ஒன்றில்* செயற்படுபவர் | ரூபா ஐந்து பில்லியன் | ரூபா பத்து பில்லியன் |
| 3 | 2023, சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் உரிமத்தினைப் பெற்றுக்கொண்ட தற்போதைய இயக்குநர்கள் | | ரூபா இரண்டு பில்லியன் (முதல் ஐந்து ஆண்டுகளுக்காக - ரூபா ஐந்நூறு மில்லியன் ; அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்காக - ரூபா ஒரு பில்லியன் ஐந்நூறு மில்லியன்) | ரூபா பத்து பில்லியன் |

* ஒருங்கிணைந்த அபிவிருத்தி என்பது ஹோட்டல், கசினோ விடுதி, பொழுதுபோக்கு, சில்லறை விற்பனை மற்றும் உணவகங்கள் உள்ளடங்கலாக பலதரப்பட்ட ஓய்வுநேர செயற்பாடுகளை வழங்கும் ஒரு உடைமை ஆகும்."

EOG 02-0108